# கற்பகம் KATPAKAM
திங்கள் இதழ்

விலை ரூபா 10/-


## குறளமுதம்-20

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-2 - அறத்துப்பால் - வான் சிறப்பு**

"நீர் இன்று அமையாது உலகு எனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு"

*பண்பு(நீர்மை) இல்லாவிட்டால் உலகம் நிலையாது என்றால், (எவ்வளவு உயர்ந்தவர்க்கும்) மழை இல்லையானால் அப்பண்புக்கு உரிய ஒழுக்கம் நிலைபெறாது.*


மலர்-02 ஜூன்-2009 இதழ்-20


# சமாசம் 12 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை சங்கங்களுக்கு வழங்கியுள்ளது!

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் அங்கத்துவ சங்கங்களுக்கு மேற்கொண்டுவரும் நலன்புரி திட்டங்களின் அடிப்படையில் சுமார் 12 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது.

சமாசத்தினால் ஆண்டுதோறும் நடைமுறைப் படுத்தப்படடு வரும் இத்திட்டத்தின்மூலம் அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களின் பிள்ளைகளும், பணியாளர்களது பிள்ளைகளும் பயன்பெற்று வருகி றார்கள்.

இத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் அங்கத்துவ சங்கங் களின் அங்கத்தவர்களின் சுமார் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கும் 600க்கு மேற்பட்ட பணியா ளர்களின் பிள்ளைகளுக்கும் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினை சமாசம் 2002ம் ஆண்டுமுதல் அமல்செய்து வருவது குறிப்பிடத்தக்கது.



## பண்டத்தரிப்பு சங்கத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டம்!

அங்கத்தவர்கள், பணியாளர்களின் பல்வேறு தேவைகளை முதன்மைப்படுத்தி பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம் சமூக மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் அங்கத்தவர்களும் பணியாளர்களும் எதிர்கொள்ளும் பல்வேறு தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருவதாக சங்க பொதுமுகாமையாளர் கி.குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டங்களை அமுல் செய்வதற்கு ஏற்ற வகையில் சங்கம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்ற நடைமுறை விதி ஒன்றினை உருவாக் கியுள்ளது. 1992ம் ஆண்டு கூ.அ.உ.ஆணையாளராக இருந்த தி.சபாரத்தினம் காலத்தில் (2ம் பக்கம் பார்க்க)

## முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு, சீருடை வழங்கல்!

தென்மராட்சிக் கொத்தணி அனுசரணையுடன் சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம் முன்பள்ளி சிறார்களுக்கான சீருடையும் சத்துணவும் வழங்கி வருகின்றது. தென்மராட்சிக் கொத்தணி தலைவரும் சங்கத் தலைவருமான கி.பூபாலசிங்கம் தலைமையில் மேற்படி பொருட்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இத்திட்டத்தின்கீழ் கொடிகாமம், சாவகச்சேரி சங்கங் களின் கீழும் தென்மராட்சிக் கொத்தணியின் கீழும் இயங்கி வருகின்ற 300 முன்பள்ளி சிறார்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. தற்போது அரச சார்பற்ற நிறுவனங் களினால் முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சத்துணவு நிறுத்தப்படும் பட்சத்தில் அம்மாணவர்களுக்கான சத்துணவையும் முன்பள்ளி (2ம் பக்கம் பார்க்க)

**சிந்தனைத்துளி**

"பிறரது குற்றங்களைப், பற்றி ஒருபோதும் பேசாதே, அவை எவ்வளவு கெட்டவை ஆனாலும் சரி: அதனால் எந்தப் பயனும் என்றும் விளைவதில்லை"!

-சுவாமி விவேகானந்தர்-

## கற்பகக்கரு

### ஏ-9 பாதை திறப்பும் பனை வளமும்?

மூன்று தசாப்த கால இடைவெளிக்குப் பின் யுத்தம் முடிவுற்ற நிலையில் தற்போது ஏ-9 தரைவழிப் பாதை அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வகைப்பட்ட பொருட்கள் இப்பாதை மூடப்பட்டிருந்த காலத்தில் யாழ்.குடாநாட்டுக்கு வருவதில்லை. இதனால் உள்ளூரில் உள்ள மூலப்பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு பாவனையாளர் மத்தியில் நல்ல மவுசு ஏற்பட்டிருந்தது. முக்கியமாக பனை வளத்திலிருந்து பெறக்கூடிய அனைத்து உற்பத்திப் பொருட்களும் மக்கள் பாவனையில் இருந்து வந்தன.

பனை வளத்தையே நம்பி உருவான கூட்டுறவு அமைப்பின் மூலம் தனி நபர் முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டு அங்கத்தவர்கள் பங்கேற்கும் பனை தென்னை வள கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு அந்த அங்கத்தவர்களின் அடிப்படை வாழ்வாதார மேம்பாட்டுக்காக பல நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவர்களது வாழ்வை வளம் கொழிக்க செய்தன.

இந்நிலை ஏ-9 பாதை திறப்பினால் மாற்றமடையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக இச்சங்க அங்கத்தவர்கள் மத்தியிலும் நிர்வாகிகள் மத்தியிலும் ஒருவித அச்ச உணர்வு பரிணமித்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள ப.தெ.வ.அ.கூ.சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி கொத்தணிகளும் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய வடமாகாண ப.தெ.வ. அ.கூ.சங்கங்களின் சமாசமும் பாரிய நெருக்கடி ஒன்றுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

தென்னிலங்கையிலுள்ள தனியார் உற்பத்தி நிறுவன உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தொழிலாளர்களின் உழைப்பை பண ஆசை காட்டி விலை கொடுத்து வாங்கி விடுவார்களோ என்ற அச்சம் தற்போது மேலோங்கியுள்ளதாக தெரிகிறது.

இந்த அச்சத்திற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் எவ்வகையிலும் முகம்கொடுத்தே ஆக வேண்டும். இச்சங்கங்கள் தற்போது பல்வேறு விதமான நலநோன்பு திட்டங்களை அங்கத்தவர்கள், பணியாளர்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இவற்றை மேலும் விரிவடையச்செய்து அவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி எந்த வகையான "ஆசைகாட்டும் நடவடிக்கைகளுக்கும்" பலியாகாமல் அங்கத்தவர்களை விழிப்புடன் இருக்கச் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு சங்கங்களுக்கு உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்நிலையில் பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோண்டாவில், மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் மேற்கொண்டுவரும் அங்கத்தவர், பணியாளர் நலன்புரித் திட்டங்களை ஏனைய சங்கங்களும் நடைமுறைப்படுத்தி தென்னிலங்கை சவால்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அனைத்து கூட்டுறச் சங்கங்களும் செயற்பட வேண்டும்.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

# கல்விப் பயிற்சி ஏன் அவசியம்?

**வ.சிவகுமார்-சமாச கல்வி உத்தியோகத்தர்**

மனிதனின் மேம்பாட்டுக்கு கல்வி மிக இன்றியமையாததாகும். கல்வி என்பது பொதுக்கல்வியையும், கூட்டுறவுக் கல்வியையும் உள்ளடக்கியதாகவுள்ளது. கல்விப் போதனை மனித அபிவிருத்திக்கு முக்கியமான அம்சமாக விளங்குகின்றது.

கூட்டுறவு அமைப்புக்கள் வெற்றிபெற வேண்டுமானால் சர்வதேச கூட்டுறவுக் கொள்கையின் 5வது விதியில் கல்வி பயிற்சியும் தகவல் திரட்டலும் என்ற கொள்கையினை கட்டாயமாக கைக்கொள்ள வேண்டும். ஜனநாயக அமைப்பான கூட்டுறவாளர்கள் தமது உரிமைகளையும், சுதந்திரத்தையும், கடமைகளையும், பொறுப்புக்களையும் பூரணமாக அறிந்துகொள்ள கல்வி அறிவு முக்கியமானது.

கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்குவதற்கும், அங்கத்தவர்களுக்கு சிறப்பான சேவைகளை ஆற்றுவதற்கும் கூட்டுறவுத்துறை சார்ந்தவர்கள் போதுமான கூட்டுறவுக் கல்வியைப் பெற்று அறிவுடையவர்களாக திகழ வேண்டும்.

பயிற்சி என்பது ஒருவரின் ஆற்றலையும் ஆளுமையையும் அபிவிருத்தி செய்து அவரது மனப்பாங்கையும் நன்நடத்தையையும் மாற்றி அமைக்கின்றது. கல்வி ஒருவரின் அறிவை வளர்ச்சியடையச் செய்கின்றது. பயிற்சி ஒருவரின் ஆளுமையை வெளிப்படுத்த உதவுகின்றது.

சங்க அங்கத்தவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும், சகலதுறை பணியாளர்களுக்கும் கூட்டுறவுத்துறைசார் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டி[illegible] மிகவும் அவசியமாகும். அங்கத்தவர் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, திட்டமிடுதல், தீர்மானம் எடுத்தல், செயற்படுத்தல் போன்வற்றை இலகுவாகவும் திறம்படவும் ஆற்ற பயிற்சி அவசியமாகும்.

பயிற்சி என்பது ஒரு மனிதனிடத்தில் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்தும் கருவியாக விளங்குகின்றது. ஆதலால்தான் பயிற்சிக்கு புதிய கூட்டுறவுக் கொள்கை முக்கியத்துவம் கொடுக்கின்றது.

**பண்டத்தரி....** 1ம் பக்கத் தொடர்ச்சி

சங்கத்தில் மரணமடைந்த அங்கத்தவர் ஒருவரின் மனைவிக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அன்றுமுதல் இன்றுவரை இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாக சங்கத்தில் பணிபுரிந்த பணியாளர் ம.நவரத்தினம் என்பவருக்கு மாதாந்த ஓய்வூதியம் தற்போது வழங்கப்பட்டுள்ளது. இவ் ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் அ.பெனடிற் தலைமையில் நடைபெற்றது.

சங்க உபதலைவர் தே.கிறிஸ்துராசா, செயலாளர் தி.இந்திரசித்து, சங்கப் பொதுமுகாமையாளர் கி.குணரத்தினம், கணக்காளர் திருமதி. இ.பரமானந்தன், பதில் கல்வி உத்தியோகத்தர் ஆ.கிறிஸ்துராசா மற்றும் சங்க நெறியாளர்குழு உறுப்பினர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஓய்வுபெற்ற களஞ்சிய முகாமையாளர் ம.நவரத்தினத்துக்குரிய ஓ[illegible]தியப் பணத்தை சங்கத் தலைவர் அ.பெனடிற் வழங்கினார். சங்க நிர்வாகிகள் சிறப்புரை ஆற்றினார்கள்.

**முன்பள்ளி.....** 1ம் பக்கத் தொடர்ச்சி

ஆசிரியர்களுக்கான சீருடை, மற்றும் சம்பள உயர்ச்சி வழங்கவிருப்பதாக இந்நிகழ்வில் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் பிரதம விருந்தினராகவும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறப்பு விருந்தினராகவும், தென்மராட்சிக் கொத்தணிப் பொதுமுகாமையாளர் க.அருட்செல்வம், கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ. சங்க பொதுமுகாமையாளர் வ.தர்மகுலசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

சென்ற இதழ் தொடர்ச்சி

இவை தவிர இளம் அங்கத்தவர் மத்தியில் தொழில் பற்றிய உயர்வான எண்ணத்தை உருவாக்குதல் வேண்டும். இதன் மூலம் தொழில் கௌரவம் பேணத் தக்கதாக நடாத்த முடியும்.

இவை தவிர சமாச அமைப்புகள், கொத்தணிகள் மூலமாக இளம் புதிய அங்கத்தவர்களின் மூலப்பொருள் மாற்று பயன்கொண்ட ஆய்வுகள் மேற்கொள்ளத் தக்கதான வசதியளிப்புக்கள் மேற்கொள் ளப்பட வேண்டும். இவற்றின்மூலம் புதிய அடையாது போய்விடின் தலைவிதி பிழைத்துவிட்டது எனவும் கூறுவதுபோல் நிறுவன இலக்கு சரியாக அடையப்பட வேண்டும். ஆனால் அதன் நிர்வாக குழு வின் தீர்மானம் பொருத்தப்பாடும் நிறை வேற்றத்தக்கதும் நடைமுறை சாத்தியமான தாயும் அமைதல் வேண்டும். எனவே தீர்மானம் எடுக்கும் குழுவின் தீர்மானங்கள் பலவீனமானதாக அமைந்து இருந்தால் நிறுவனத்தின் தலைவிதியும் சரியானதாக அமைந்துவிட முடியாது. எனவே நிர்வாக குழுவினர் நோக்கமானது,

01. நிறுவன நீண்டகால இலக்கை டலை மேற்கொள்ள வேண்டும். அதே நேரம் பிரிவினையை தூண்டும் வகையில் குறிப்பிட்ட குறுகிய இலாபத்துடன் தமது வழிகாட்டலை வழங்கக்கூடாது.

**நிர்வாகிகள் பொருத்தமான தீர்மானங்களை எடுத்தலில் எவ்வாறு உதவமுடியும்?**

01. ஒரு குறிப்பிட்ட ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் நோக்கம், வரையறைகள், சட்டக்கட்டுப்பாடுகள் தொடர்பில் பரந்த அறிவூட்டல் வழங்கப்படல் வேண்டும். இது மேல்நிலை அமைப்புக்களால் அல்லது

# பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் எதிர்கால இலக்கு!

கண்டுபிடிப்புக்களை ஏன் நாமும் இத்துறையில் உருவாக்க முடியாது என பரந்து நோக்கினால் வெறும் மது உற்பத்தியாளர், விற்பனையாளர் என்ற பெயரை மாற்றி அமைத்தல் முடியும்.

இதுவரை சமூக நலன்சார் உறுப்பினர் என்ற வகையீட்டில் நிறுவன உரிமையாளராக அங்கத்தவர் எதிர்பார்ப்பும் அவற்றை நிறைவேற்றுவதில் உள்ள தடைகளையும் நோக்கினோம்.

இனி இதன் இரண்டாவது பகுதியினர் அங்கத்தவரால் உருவாக்கப்பட்ட நெறியாளர்குழு அல்லது நிர்வாக குழுவின் நோக்கம் எவ்வாறு இருக்க வேண்டும்? விலகல்கள் என்ன, தீர்வு என்ன? என எடுத்து நோக்குவோம்.

முதலில் நிர்வாகக்குழுவை யார் என நோக்கின் கிளை அங்கத்தவர் → கிளைப்பொதுச்சபை → கிளைக்குழு → சங்கப் பொதுச்சபை → நிர்வாக சபை என சங்கிலி அமைப்பாக அமைந்த ஒரு தொடர்பின் வழியே. தமது ஏக பிரதிநிதிகளாக ஜனநாயக வழியில் தோற்றுவித்த ஒரு குழுவே ஆகும்.

இவர்களின் பிரதான நோக்கம் என்னவெனில் சங்கத்தின் தூரநோக்கு (Vision) என்ன என்பதை உணர்ந்து அதற்கு ஏற்ப நிறுவன நோக்கம் (Object) என்பதான குறுநிலை இலக்கை அடையத்தக்கவாறு தீர்மானங்களை ஆற்றுவதாகும்.

ஒருவரின் தலைவிதி என்பது அவர் உயர்ந்த இடத்தில் இருந்தால் நல்லது என்றும் அவர் எதிர்பார்த்த இலக்கை உணர்ந்து குறுகிய காலத்தில் மிக விரைவில் அடையக்கூடிய தீர்மானங்களை உருவாக்கல்.

02. நாட்டின் விதி, சட்டம் என்பவற்றை மீறாது சங்க நடைமுறை விதிகளுக்கு அமைவான தீர்மானங்களை இயற்றுவது.

03. ஆபத்து தன்மை முதலீட்டு இலாபம், சமூக நலன் என்பவற்றை பிரதி

திருமதி.கி.தவம்,
ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
மானிப்பாய்.

பலிக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

04. பக்கச்சார்பு அற்ற தீர்மானமாயும் நிறுவன வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்காத தீர்மானங்களை இயற்றுதல்.

05. காலத்துக்கு காலம் புதிதாக வரும் நிர்வாகங்களால் எடுக்கப்படும் தீர்மானங்கள் ஏற்கனவே சங்கத்தில் உள்ள உறுதித்தன்மை, ஒற்றுமை என்பவற்றைக் குறைக்கக் கூடியதாக இருத்தல்கூடாது.

06. தீர்மானங்களை எடுக்கும்போது சரியான தகவல்கள் எதிர்கால எதிர்வு கூறல்களை கவனித்தே எடுத்தல் ஆரோக்கியமானது.

இவ்வாறு புதிய நிர்வாக கட்டமைப்பில் உள்வாங்கப்படும் உறுப்பினர் சிந்திக்க முற்படும்போது தமது ஆலோசனைமையங்களாக நீண்டகாலமாக உள்ள ஆளணியினரை நாடுவர். அவர்கள் சரியானதும் தெளிவானதுமான தீர்மானத்தை எடுக்கத்தக்கவாறு தமது வழிகாட் குறித்த சங்கத்தால் வழங்கப்படல் அவசியமாகும்.

02. புதிய நிர்வாகம் ஒன்று அமைக்கும்போது 2/3 பெரும்பான்மை, பழைய அனுபவசாலிகளும் 1/3 பகுதியினரே புதியவராகவும் கொண்டதாக அமைத்து பயிற்சிகளை புதியவர்களுக்கு வழங்க வேண்டும்.

03. தீர்மானங்களை நிறைவேற்றும் போது சரியான தகவல்களை சொல்லும் எதிர்வுகூறல்களை நோக்கம் பொருத்தப்பாடுடைய தீர்மானங்களை ஆற்றல் நன்று.

04. தீர்மானங்களை உருவாக்கும் போது பக்கசார்பு கொண்டதாகவும் சில சாராரை பாதிக்கக் கூடியதாகவும் அமைதல் கூடாது.

05. பல்வேறு மாற்று உபாயங்களை தேர்ந்து எடுத்து பொருத்தமுடையதும் சரியானதும் எனக் கருதும் மாற்று வழியில் இருந்து தீர்மானம் எடுத்தல் சிறந்தது.

06. தீர்மானம் எடுத்தலில் அதனை நிறைவேற்றும் தரத்தை சேர்ந்தவரின் ஆலோசனையும் அபிப்பிராயமும்பெற்று தீர்மானம் எடுத்தால் நடைமுறைப்படுத்தல் சுலபமாகவும், பூரண ஒத்துழைப்பும் கிடைக்கும்.

இவ்வாறு நிர்வாகிகளை வழிப்படுத்தும் அதேவேளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,

01. நிர்வகிக்கும் சங்க சட்டவிதி, கட்டுப்பாடு தொடர்பில் பூரண பயிற்சியும், அறிமுகமும் வழங்கல்.

(வளரும்)

# நிகழ்வுகளின் நிழல்கள்

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



தென்மராட்சிக் கொத்தனியின் அனுசரணையுடன் சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்க முன்பள்ளி மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வில் கூ.அ.உத்தியோகத்தர்.க.பாலகிருஸ்ணன் மங்கள விளக்கேற்றுவதையும், சங்கத் தலைவர் கி.பூபாலசிங்கம் உரையாற்றுவதையும், சங்கப் பொதுமுகாமையாளர் மாணவரொருவருக்கு சீருடை வழங்குவதையும் முதல் மூன்று படங்களிலும், சங்கக் கல்வி உத்தியோகத்தர் க.ப.லோகநாதன் நன்றியுரை நிகழ்த்துவதையும், சங்கப் பொதுமுகாமையாளர் ந.ஞானசேகரம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி.கு.ஆறுமுகத்திற்கு முன்பள்ளி ஆசிரியை செல்வி க.ரூபகௌரி மாலையணிவித்து வரவேற்பதையும் கீழேயுள்ள மூன்று படங்களிலும் காணலாம்.

## அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூ.சங்கம்



அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் மரநடுகை மற்றும் கிராமிய வங்கி பரிசில் நாள் நிகழ்வும் நடைபெற்றபோது சங்கப் பொதுமுகாமையாளர் பொ,செல்வராசா உரையாற்றுவதையும், முன்பள்ளி ஆசிரியை ஒருவருக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கூ.அலுவலர் இ.விஜயமோகனராசா சீருடை வழங்குவதையும், கூ.அ.உ.ஆணையாளர் பொ.சிவலிங்கம் சிறந்த அங்கத்தவருக்கு பரிசில் வழங்குவதையும், சிறுவர் சேமிப்புக் கணக்கில் அதிகளவு பணம் சேமித்தமைக்காக சிறுவனொருவருக்கு வடமராட்சிக் கொத்தனித் தலைவர் பரிசில் வழங்குவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

## பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்



பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 60 வயதினைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்ற சங்கப் பணியாளர் ம.நவரத்தினம் என்பவருக்கு மாதாந்த ஓய்வூதியத் தொகையை சங்கத் தலைவர் வழங்குவதை மேலுள்ள படத்திலும், முன்பள்ளி சிறார்கள் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை கீழுள்ள படத்திலும் காணலாம்.

# யப்பானிய முகாமைத்துவம்
# JAPANESE MANAGEMENT

இன்று நவீன உலகில் யப்பானிய முகாமைத்துவம் மிக முதன்மை பெற்றதாகவும், தன்னிகரற்றதாகவும், மிகப் பிரபலம் பெற்றதாகவும் விளங்குகின்றது. 20ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் உலகெங்கும் நடைபெற்ற பயங்கரமான இரண்டாம் மகாயுத்த காலத்தில் அமெரிக்கா உலகில் முதன் முதலாக கீரோசீமா, நாகசாக்கி என்ற யப்பான் தேசத்தின் வளம் கொழிக்கும் நகரங்கள்மீது **"நாசகாரச் சக்திகள்** (Destruction) **நிறைந்த அணுகுண்டுகளை"** வீசிப் பாரிய தாங்க முடியாத அனர்த்தங்களை யும், பேரழிவுகளையும் ஏற்படுத்தியதனால் முற்றாக அழிக்கப்பட்டு மீண்டுமொரு முறை அபிவிருத்தியடைய முடியாததன்றி அழியும் பரிதாபகரமான சோகம் நிறைந்த நிலையில் உலக மக்களின் மனக்கண் முன் யப்பான் தேசம் தோன்றியது.

இத்தகைய பரிதாபகரமான நிலையிலிருந்த யப்பான் தேசம் வெகு விரைவில் 20 நூற்றாண்டின் பிற்பகுதியில் **"நவீன உலகம் அனைத்தும் பெரிதும் வியந்து போற்றும் வகையில் உலகில் அதிசக்திவாய்ந்த விஞ்ஞான ரீதியிலான பிரபலம் பெற்ற கைத்தொழில் நாடாகத்தோன்றுவதற்கும்"** (Powerfull Populor Big Scientific Industrial Country in the Modern World) உலக சந்தையில் பிரபலம் பெற்று உலகச் சந்தையை முற்றாக தன்வசப்படுத்தும் மதிப்பும், சிறப்பும் மிக்க கைத்தொழிற் பொருட்களை விநியோகிக்கும் நாடாகத் தோன்றுவதற்கும், அமெரிக்கா உட்பட்ட உலக நாடுகள் யாவும் **"யப்பானிய விஞ்ஞான ரீதியிலான கைத்தொழில் நுணுக்கங்களை"**(Scientific Industrial Technicalities of Japanese) பின்பற்றுவதற்கு பேராவல் கொண்டிருப்பதற்கும் யப்பானிய முகாமைத்துவத்தின் பிரபலம்பெற்ற சிறந்த முகாமைத்துவக் கருத்துக்களே பெரிதும் உரமாக அமைந்தன.

உலக நாடுகளிலுள்ள முகாமைத்துவ கைத்தொழில் நுணுக்கங்களைவிட யப்பானிய முகாமைத்துவ கைத்தொழில் நுணுக்கங்களே பெரிதும் முதன்மை பெற்றவையாக விளங்குவதினால், கடந்த மூன்று தசாப்த காலமாக உள்நாட்டுப் போரால் முற்றாகப் பாதிக்கப்பட்டு பரிதாபகரமான நிலையிலுள்ள எமது பிரதேச கூட்டுறவுச் சங்கங்களை நவீன காலத்திற்கேற்ற அமைப்புக்களாகப் புதுப்பிப்பதற்கும் (Modernize) யப்பானிய முகாமைத்துவக் கருத்துக்களே சிறந்த பரிகாரமென நாம் பூரணமாக நம்புவதால் அவற்றைப் பற்றிச் சிறிது ஆராய்ந்து மதிப்பிட்டு விளக்குவோம்.

### யப்பானிய முகாமைத்துவத்தின் முக்கிய பண்புகள்
### The Important Natures of Japanes Management

#### கூட்டுப்பொறுப்பு
#### Combined Responsibilitiy

ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டை நிறைவேற்றும்போது அச்செயற்பாட்டுடன் தொடர்புடைய அனைவரும் அச்செயற்பாட்டின் பொறுப்பை முழுமையாக ஏற்று ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியுடனும், கடமையுணர்வுடனும், திறமையுடனும் செயற்பட்டால் அச்செயற்பாடு பூரணமாக வெற்றிபெறுமென வலியுறுத்தும் யப்பானிய முகாமைத்துவக் கோட்பாடே கூட்டுப் பொறுப்பு ஆகும். ஒரு கருமத்தை நிறைவு செய்வதில் அதனுடன் தொடர்புகொண்டுள்ள அனைவரும் அக்கருமத்தில் கரிசனையுடனும், அக்கறையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் தொழிற்பட வேண்டுமென்பதே யப்பானிய முகாமைத்துவத்தின் முக்கியமான கருவாகும்.

திரு.இ.சுப்பிரமணியம் B.A
(இளைப்பாறிய அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி நிலையம் -வ.கி.மாகாணம்.)

அமெரிக்காவினதும், இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளினதும் முகாமைத்துவ அம்சங்களில் தனிநபர் பொறுப்பு (Individual Responsibility) வலியுறுத்தப்பட்டுள்ளபோது யப்பானிய முகாமைத்துவம் மட்டும் கூட்டுப் பொறுப்பை வலியுறுத்திச் சிறப்பாகக் கடைப்பிடித்து வருவது பாராட்டுக்குரியதாகும். இது யப்பானிய முகாமைத்துவத்தின் தலைசிறந்த தனிச்சிறப்பாகும்.

யப்பானிய கூட்டுப்பொறுப்பில் உள்ள தனிச் சிறப்புக்களை நாம் ஆராய்ந்து மதிப்பிட வேண்டும். உதாரணமாக தனியார் நிறுவனமொன்றில் நிறுவனத்தின் பொறுப்புக்கள் யாவற்றையும் நிறுவனச் சொந்தக்காரரும், அவரின் மனைவி, மக்கள், சகோதர சகோதரிகள், தந்தை-தாய், மாமன்-மாமி போன்றோர் இணைந்து கூட்டுப்பொறுப்புடனும், பொறுப்புணர்ச்சியுடனும், கடமையுணர்வுடனும் ஒற்றுமையாகச் செயற்படுவதினால் நிறுவனத்தில் களவு, மோசடி, நம்பிக் கைத்துரோகம், சேதாரம் அழிவு முற்றாக இல்லாமல் நிறுவனம் சிறப்பாக இயங்குவது போன்றே யப்பானிய நிறுவனங்களிலும் கடமைபுரியும் முகாமையாளர்களும், தொழிலாளர்களும் கூட்டுப் பொறுப்புடன் கடமை புரிவதனால்தான் யப்பானிய நிறுவனங்கள் உலக சந்தையை முற்றாகக் கவர்ந்து உலகம் போற்றும் சாதனையைப் புரிந்துள்ளன.

ஒரு கடமையைப் பலர் பொறுப்பேற்றுக் கடமைபுரியும்போது அக்கடமையைத் திறம்பட நிறைவு செய்யாமையால், நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டங்களுக்கு அக்கடமையைப் புரிந்த அனைவரும் பொறுப்பென்பதால் அக்கடமையில் அனைவரும் பற்றும், கரிசனையும், கவனமும் உள்ளவர்களாகச் செயற்படுவர். பொறுப்பில்லாத இடத்தில் புனிதமான கடமை தோன்றாது. பொறுப்புத்தான் கடமையின் கருவும், பிறப்பிடமுமாகும் (Responsibility issuitable Base of Duty) என்பது யப்பான் முகாமைத்துவத்தின் மற்றொரு முக்கிய கருவாகும்.

ஒரு கைத்தொழிற்பொருள் உற்பத்தியில் பல வகைப்பட்ட உற்பத்தி நுட்பங்கள் (Production Technics) காணப்படுகின்றன.இவற்றை அவற்றின் தன்மைக்கும், இயல்புக்கும் ஏற்ப முறையாக பாகுபடுத்தி ஒவ்வொன்றையும் அவற்றில் போதிய திறமையுடைய தொழிலாளர் தமக்கிடையே பகிர்ந்து (Distribution of Duties) கூட்டுப்பொறுப்புடன் திறம்படச் செய்தால் உற்பத்திப் பொருட்களின் தரமும், உற்பத்திப் பொருட்களின் அளவும், நிறுவனத்தின் இலாபமும் பன்மடங்காக அதிகரிக்குமென யப்பானிய முகாமைத்துவம் முன்மொழிந்துள்ளது. உதாரணமாக எமது ப.தெ.வ.அ.கூ. சங்கங்கள் உற்பத்தி செய்யும் வெல்லத்தின் உற்பத்தி நுட்பங்களை அவற்றின் தன்மைக்கேற்ப கள்ளை உற்பத்தி செய்வோர் திறமையுடைய பலராகவும், பதநீரை உற்பத்தி செய்பவர் வேறு திறமையுள்ள பலராகவும், பதநீரை வெல்லமாக உருவாக்குவோர் பிறிதொரு பலராகவும், வெல்லத்தை பாவனைக்கு உகந்த பொருளாக உருவாக்குபவர் வேறு பலராகவும் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட்டால் உற்பத்திப் பொருட்களின் தரமும், அளவும் பன்மடங்காக அதிகரிக்கும். வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரிடையே முழுமையான கூட்டுப்பொறுப்பு இல்லாவிட்டால் வெல்ல உற்பத்தி வெற்றிபெற முடியாது.

-வளரும்-

## வெற்றியாளராக...!

உன்னால் முடியுமான சிறந்ததொன்றில்
திறமையுடன் நம்பிக்கை வை
வாழ்க்கையை சந்தோசமாக வாழ்வதில்
நேர்மையைக் கடைப்பிடி
இதுவே உன் வெற்றியின் முதல் படி

கேட்பதற்கும் எதையும் பங்கிடவும்
நேரத்தை ஒதுக்கு
மற்றவர்களை மதிப்பதுடன்
அவர்களுடன் பொறுமையாகவும்
நியாயமாகவும் உண்மையுடன் நடந்துகொள்
இதுவே உன் வெற்றியின் இரண்டாம்படி!

எங்கு நீ செல்லினும் அங்கு காணப்படும்
எல்லா அழகானவைகளையும் இரசி
உன் பலத்தை மனதால் நீ புகழ்வதுடன்
மற்றவைகளையும் உலகத்தையும்
-பார்த்துக்கற்றுக்கொள்
இதுவே உன் வெற்றியின் மூன்றாம்படி!

மிகுதி எல்லாம் வாழ்வின் ஊன்றுகோல்கள்
வெற்றியின் படிக்கற்கள்
தடைக்கற்களை உடைத்தெறிந்து
வெற்றிப்பாதையை நோக்கி
உன்பயணம் தொடரட்டும்!

செல்வி மதனரூபி-பாரதிதாசன்,
மஹாத்மா வீதி,
அல்வாய் வடக்கு.

## பணம்!



மனம் இல்லாத பணமே
மார்தட்ட வைக்கும் குணமே
யாருக்கும் சொந்தமில்லா பணமே
யாத்திரை செய்கின்ற குணமே

ஏழைக்கு எட்டாத பணமே
ஏழ்மையாய் கிடைக்காத குணமே
பசிக்கு உதவாத பணமே
பட்டினி போக்கிடும் குணமே

கட்டிக்க முடியாத பணமே
கச்சைக்கு உதவிடும் குணமே
பூசைக்கு உதவாத பணமே
பூசகருக்கு உதவிடும் குணமே

காவலுக்கு உதவாத பணமே
காவலனுக்கு உதவிடும் குணமே
நிரந்தரம் பெற்றிடாத பணமே
நிம்மதியைக் குலைத்திடும் குணமே!

இ.இலட்சுமி,
கோப்பாய் ப.நெ.வ.அ.கூ.சங்கம்

## பெற்றவர் தவிக்கின்றாரே!



அடுக்களை விட்டு வந்த
ஆளுமை கொண்ட பெண்ணே
பகட்டுடன் வாழ எண்ணி
படிப்பினால் உயர்ந்து விட்டீர்
வாழ்க்கையின் உச்சக் கட்டம்
வரன் அது தேடும் காலம்
வயதுமோ ஏறிப்போச்சு
வடிவமும் மாறிப்போச்சு
கற்றவர் தரத்திற்கான
கணவனைத் தேடலாச்சு
கேள்விகள் அதிகமாச்சு
கேட்டதும் துயரமாச்சு
கொடுத்திட வகையும் போச்சு
கொட்டினோம் படிப்பிற்காக
கட்டினோம் மனதில் கோட்டை

கல்வியில் தேறினாலும்
கற்றவர் ஆகினாலும்
பணம் அற்றவர் ஆனதாலே
பெற்றவர் தவிக்கின்றாரே
பெண்மையே எண்ணிப்பாராய்!

இ.காந்தன்
கோப்பாய் ப.நெ.வ.அ.கூ.சங்கம்

# கவியின்பம்

## அம்மா!

அன்பின் இலக்கணம் அம்மா
ஆறுதல் தருபவள் அம்மா
இன்பம் மட்டும் தருபவள் அம்மா
ஈரைந்து மாதமெமை சுமந்தவள் அம்மா
உலக மகாசக்தியே அம்மா
ஊன்றுகோலாய் எம்முடன் இருப்பவள் அம்மா
எண்ணும் எழுத்தும் கொடுத்தவள் அம்மா
ஏற்றம் பல பெற வைப்பவள் அம்மா
ஐயம் போக்கிட வைப்பவள் அம்மா
ஒற்றுமைதனை வளர்ப்பவள் அம்மா
ஓங்காரரூபமே அம்மா
ஔடதமாய் உடனிருந்து
-பார்ப்பவளே அம்மா!



பி.பிறேம்
திக்கம் வடிசாலை

## பச்சைப் பாவாடை

இனிவரும் நாட்களில்
இளவேனில் கருக்கட்டும்
மாருதம் தவழ்ந்து
செடி கொடி தழுவும்
முதிர்ந்த இலையுதிர்த்து
மரங்கள் புதிதாய்ப் பிறக்கும்
முற்றத்து வேம்பிருந்து
குக்கூவென்று குயில்கள் பாடும்
ஆடுகால் பூவரசுகள் அசையும்
துலாக்கள் உடற்பயிற்சி செய்யும்
அறுகு படர்ந்த வரம்பில்
ஆடுகள் அணிவகுக்கும்
பச்சைப் பாவாடை கட்டி
தோட்டங்கள் அழகு காட்டும்
விடிகாலை எழில்பூட்டி வெளியே வரும்
சந்தைக்குப்போகும் வாகனங்களின்
சக்கரச் சத்தம் பூபாளமாகும்
வரும்காலம் வசந்தம்
எம் மண் இனி அழகு!

– சிவா–

# கணக்காய்வு அறிக்கை

நிதிக் கூற்றுக்களின் உண்மையானதும், செம்மையானதுமான தன்மை பற்றி சுதந்திரமான திறன் தொழில் அபிப்பிராயமொன்றை முன்வைக்கும் நோக்குடன் தமது கருத்துக்களினை தெரிவிக்கும் முகமாக வழங்கப்படும் அறிக்கை இதுவாகும்.

**கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் / கணக்காய்வு அறிக்கையின் அடிப்படை மூலங்கள்**

**i தலையங்கம்:–**

கணக்காய்வாளரின் அறிக்கையானது பொருத்தமானதொரு தலைப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும். தலைப்பில் சுதந்திரமான கணக்காய்வாளர் எனும் சொற்றொடரைப் பயன்படுத்துதல் பொருத்தமானது. மேலும் தலைப்பு பொதுவாக நிறுவனத்தின் பெயர், நிதிக் காலப்பகுதி, சட்ட ஏற்பாடுகளிருப்பின் அதன் பிரிவுகள் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

**ii விலாசதாரர்:–**

கணக்காய்வு அறிக்கையானது பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**iii ஆரம்பப்பந்தி/அறிமுகப்பந்தி:–**

கணக்காய்வு அறிக்கையானது நிதிக் கூற்றுக்களின் திகதி, காலப்பகுதி ஆகியவற்றையும் மேலும் நிதிக்கூற்றுக்களினைத் தயாரித்து அளிப்பது முகாமையின் பொறுப்பு என்பதுடன் கணக்காய்வின் அடிப்படையில் நிதிசார் கூற்றுக்கள் பற்றி அபிப்பிராயம் கூறுவது கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற கூற்றும் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும். மேலும் நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் முகாமை குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகளினையும் கணக்கீட்டு கோட்பாடுகளையும், முறைகளையும் தீர்மானிப்பது முகாமையின் பொறுப்பாகும்.

**iv நோக்கு எல்லைப்பந்தி:–**

கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களினடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், மேலும் நிதிசார் கூற்றுக்களில் பொருண்மையுள்ள பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டினை பெறுவதற்காக கணக்காய்வானது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் மேலும் நிதிசார் கூற்றுக்களில் தொகைகளுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் ஆதாரமாக உள்ள சான்றுகளினை போதுமான அளவில் பரீட்சித்துள்ளோம் என்பதுடன் நிதிசார் கூற்றுக்களினை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினை மதிப்பிடல் முகாமை மேற்கொண்ட முக்கியமான கணிப்பீடுகளினை மதிப்பீடு செய்தல் போன்வற்றினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

செல்வி. மதனருபு–பாரதிதாசன்
(H.N.D.A)
மஹாத்மா வீதி, அல்வாய் வடக்கு.

**V அபிப்பிராயப் பந்தி:–**

கணக்காய்வு அறிக்கையின் பிரதான விடயமாக இது காணப்படுகின்றது. கணக்காய்வாளர் அறிக்கை சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்புடையதாக இருப்பதுடன் நிதிசார்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி உண்மையான, நியாயமான தோற்றப்பாட்டினை வழங்குகின்றது என்பதனையும் அது பொருண்மையுள்ள சகல விடயங்களிலும் நியாயமானதாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதனைக் குறித்துக்காட்டுகின்றது.

**vi அறிக்கையின் திகதி:–**

கணக்காய்வு செய்து முடித்த திகதியே அறிக்கையின் திகதியாக காட்டப்படுதல் வேண்டும். முகாமையினால் தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளருக்கு முன்னிலைப்படுத்தப்பட்ட தினத்திற்கு முன்னதாக கணக்காய்வாளர் அறிக்கைத் திகதி இருத்தல் கூடாது.

**vii கணக்காய்வாளரின் விலாசம்:–**

கணக்காய்வாளர் அறிக்கையானது ஒரு குறிப்பிட்ட அமைவிடத்தினைப் பெயரிடப்பட வேண்டும். அவ் அமைவிடமானது கணக்காய்வுக்குப் பொருத்தமாக உள்ள கணக்காய்வாளர் நடாத்தும் அலுவலகம் அமைந்துள்ள நகரமாக இருத்தல் வேண்டும்.

**viii கணக்காய்வாளரின் கையொப்பம்:–**

கணக்காய்வு அறிக்கையானது பொருத்தமான வகையில் நிறுவனத்தின் பெயரால்/கணக்காய்வாளரின் தனிப்பட்ட பெயரால்/இரண்டு பெயர்களாலும் க்கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

**அறிக்கையிடல் நியமங்கள்**

இலங்கை கணக்காய்வு நியமம் 26ன்படி அறிக்கையிடுதல் பற்றி பின்வரும் விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

**i அறிக்கையிடல் நியமத்தின் நோக்கம்:–**

கணக்காய்வு அறிக்கையின் வடிவம், உள்ளடக்கங்கள் என்பவை மீதான நியமங்களினை நிர்ணயிப்பதும் வழிகாட்டல்களை வழங்குவதும்.

**ii கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை:–**

கணக்காய்வாளர் கணக்காய்வு தொடர்பான மீளாய்வுகளினைச் செய்து மதிப்பிடப்படுதல் வேண்டும்.

**iii நிதிக்கூற்றுக்களின் மீளாய்வும் மதிப்பீடும்:–**

நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகவும் சட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாவும் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதனையும் கருத்தில் கொள்ளப்படுகின்றனவா என்பதனையும் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

**iv கணக்காய்வு அபிப்பிராயம்:–**

நிதிக்கூற்றுககள் மீது எழுத்து மூலமான அபிப்பிராயத்தினை/கருத்தினை தெரிவித்தல் வேண்டும்.

**V கணக்காய்வு அறிக்கையின் அடிப்படை மூலங்கள்:–**

**கணக்காய்வு அபிப்பிராயம்**

கணக்காய்வாளர் குறித்த நிறுவனத்தில் நிதிக்கூற்றுக்கள் பற்றி கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கும் கருத்துக்களே கணக்காய்வு அபிப்பிராயமாகும்.

கணக்காய்வாளர் தனது கணக்காய்வு அறிக்கையில் கீழ்வரும் 4 வகையான அபிப்பிராயங்களில் ஏதேனும் ஒன்றினை முன்வைக்க முடியும்.

i. நிபந்தனையுடனான அபிப்பிராயம்.
ii. பிந்தனையற்ற அபிப்பிராயம்.
iii. பாதகமான அபிப்பிராயம்.
iv. உரிமை மறுப்பு அபிப்பிராயம்.

முற்றும்

## சமாச மட்ட கல்விப் பயிற்சி




ப.தெ.வள அபி. கூ.சங்கங்களின் கீழ் இயங்கி வரும் கிராமிய வங்கிகள் அனைத்தும் தமது கணக்கு வைப்பு முறைகளை ஒரே மாதிரியாக வைத்துக்கொள்ள வேண்டும். வங்கிகளில் பணத்தை மீளப்பெறும் அங்கத்தவர்கள் அதற்குரிய படிவங்களை தாமே நிரப்பி பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென மாவட்ட கூ.அலுவலர் ரி.என்.ராஜா தெரிவித்தார்.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் தனது அங்கத்துவ சங்கங்கள், கொத்தணிகளின் கணக்காளர்கள், கிராமிய வங்கி முகாமையாளர்கள், கல்வி உத்தியோகதர்கள் ஆகியோருக்கான கல்விப் பயிற்சி ஒன்றை அண்மையில் சமாச மண்டபத்தில் நடத்தியிருந்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி நிலைய அதிபர்(வ.கி.மாகாணம்) இ.சுப்பிரமணியம், சமாசக் கல்வி உத்தியோகத்தர் வ.சிவகுமார், சமாசப் பொதுமுகாமையாளர் ஜே.பி.குணரத்தினம் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

### பருத்தித்துறை கலட்டி புனித அந்தோனியார் ஆலய

## 175வது ஆண்டு நிறைவு விழா!



பருத்தித்துறை கலட்டி புனித அந்தோனியார் ஆலய திருவிழாவும் 175வது ஆண்டு நிறைவு விழாவும் கடந்த 13ம் திகதி சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் தலைமையில் இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் யுத்தம் நடந்த காலமான 1656-1796 காலத்தில் வெளிப்படையாக தங்கள் தங்கள் மதங்களை பரப்ப முடியாது இருந்ததனால் மறைமுகமாக கத்தோலிக்க மதத்தைப் பரப்பிய ஒரு பாதிரியாரால் கொடுக்கப்பட்ட புனித அந்தோனியார் சுரூபம் குடிசை வடிவில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் பராமரிக்கப்பட்ட பின் 1833ம் ஆண்டில் 4ம் குறுக்குத் தெருவில் கட்டப்பட்ட தொடர் ஆலயம் 2008ம் ஆண்டு முடிவில் அதன் 175வது ஆண்டு நிறைவு விழாவை 13-06-2009ல் கொண்டாடியது.


எமது கொத்தணியின்
தயாரிப்பான தரமான
வரணி பனஞ்சாராயம்
750மி.லீற்றருடன் தற்போது
375, 180 மி.லீற்றர்
அளவுகளிலும் கிடைக்கின்றது.




- உழவு இயந்திர வாடகைச் சேவை.
- வருடாந்தம் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணி வழங்குதல்.
- பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைத் துணி வழங்குதல்.

போன்ற சேவைகளுடன்

அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர், பணியாளர்களுக்கான பல்வேறு வகையான நலத்திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வதுடன் பொதுமக்களுக்கான சேவைகளுக்கும் எமது கொத்தணி பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி
வரணி


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2009ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்டது.